1990 மே, 7]

புதிய பேருந்து நிலையம் கட்டுதல்,

* 8085. திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தரங்கம்பாடி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி பேரூராட்சியில் பொறையாற்றில் அவசியமாக ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். அங்கே சோழன் போக்குவரத்துக் கழகத்தினுடைய டெப்போ இருக்கிறது. அதிலே நூற்றுக்கு மேற்பட்ட பஸ்கள், பொறையாற்றிலிருந்துதான் கடை வீதி மூலமாகப் புறப்படுகிறது. மேலும் பெரியார், மற்றத் தனியார் வாகனங்கள் 50-க்கு மேற்பட்ட வாகனங்கள், மொத்தம் 300, 400 முறை பொறையாறு கடை வீதியிலிருந்துதான் புறப்படுகின்றன. அந்தக் கடைவீதி மிகவும் குறுகலானது. ஒரு சைக்கிள் கூட மாற முடியவில்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனது தொகுதியிலே இதுவரை ஒரு பேருந்து நிலையம் கூடக் கிடையாது. ஆகவே, முக்கியமாக அரசு இந்தப் பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு வரும் ஆண்டிலாவது முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தப் பேரூராட்சியில் ஒரு பேருந்து நிலையம் தானாகக் கட்டுவதற்கான நிதி வசதி இல்லை. அப்படிக் கட்டுவதாக இருந்தாலும், உலக வங்கியில் கடன் பெற்றுத்தான் கட்டவேண்டும். பேரூராட்சி அப்படி ஒரு செயற்குறிப்பை ஏற்பாடு செய்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையுடன் இங்கு அனுப்பினால் அதைப் பற்றிப் பரிசிலனை செய்து, கடன் உதவி வழங்க நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்படும். மேற்படி பொருளுக்கு, நகர சீரமைப்புத் திட்டத்தின் குழு ஒன்றுதான் ஒப்புதல் அளிக்கமுடியும். நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் வைக்கப்பட்டு;

அதற்குப் பிறகு நகர சீரமைப்புத் திட்டத்தின் குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றால் மட்டுமே இதன் மேல் அரசு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

ஏழாச்சேரி வரத்துக் கால்வாய்.

* 2572— திரு. வ. அன்பழகன் ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதியில் உள்ள ஏழாச்சேரிக்கு வரும் வரத்துக் கால்வாயில் தூர் வாருவதுடன் சிமெண்ட் லைனிங்கும் செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இக்கால்வாய் ஏற்கெனவே வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துத் தூர் வாரப்பட்டிருக்கிறது. லைனிங் செய்யும் பணி, தூசி மாமண்டூர் ஏரி நவீனப்படுத்துகிற நேரத்தில் எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தூசி மாமண்டூர் ஏரிக்கு, ஏரியை நவீனப்படுத்த ரூபாய் 1.38 கோடி அறிவித்து இருக்கிறார்கள். அப்படி அறிவிப்புச் செய்து, வரலாற்றில் ஒரு மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். தூசி மாமண்டூர் ஏரி என்று சொல்கிறபோது, தொகுதிக்கு ஒரு பெரிய நன்மை கிடைத்திருக்கிறது. ஏழாச்சேரி என்பது என்னுடைய சொந்த ஊராகும். எனவே, நான் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கிற விதத்தில், அதைத் தவறாமல் இந்தத் திட்டத்திலே சேர்த்து நவீனப்படுத்தித் தருவாரா என்று உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்கள்ள, தூசி மாமண்டூர் ஏரியில், 4-வது மதியிலேயிருந்து செல்கிற ஒரு கிளைக் கால்வாய்தான் ஏழாச்சேரி ஏரியினுடைய வரத்துக்கால்வாய். ஏற்கெனவே வறட்சி நிவாரணத்தில் 10 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, இந்த ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 138,20 இலட்சத்